88

விலை சதம் -/25

**அகிம்சை போராட்டம்**

இம்சைப் புரட்சிக்கும் அகிம்சைப் புரட்சிக்கும் உள்ள முக்கிய வித்தியாசத்தை மறந்துவிடாதீர்கள். இருக்கும் சமுதாய அமைப்பினை மாற்றும் போராட்டமும் புதிய சமுதாயத்தினை உருவாக்கும் வேலையும் ஒரே சமயத்தில் நடப்பது அகிம்சைப் புரட்சியால்தான் சாத்தியம். பலாத்காரப் புரட்சி வெற்றி பெறும்பொழுது பலாத்காரக்கருவிகள் யார் கையில் இருக்கிறதோ அவர்கள் ஆட்சி ஏற்படுமேயன்றி மக்கள் ஆட்சி ஏற்படாது. - ஜெயப்பிரகாஷ் நாராயண்


# காந்தீயம்

மலர் 17 (காந்தி ஆண்டு 110) 1979 மார்ச் இதழ் 2-3


# தனக்கென வாழாத் தவ வாழ்க்கை

**1979** அக்டோபர் 8, திங்கட்கிழமை பாரதத்தின் தவப்பயனாய்த் தோன்றிய மக்கள் தலைவர் (லோக் நாயக்) இறைவனில் கலந்த நாள்.

மக்களின் உள்ளங்களில் கொலு வீற்றிருக்கும் 'ஜெ, பி.' என்ற இரட்டை எழுத்துக்களால் வரலாறு படைத்த மாமனிதரின் மறைவுச் செய்தி மக்களைத் துன்பக் கடலில் தள்ளியிருக்கின்றது.

மக்கள் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் ஒரு தனி மனிதரல்ல. அவர் ஓர் இயக்கம். அறப் புரட்சியின் புற வடிவமே அவரது வாழ்க்கை. பொங்கி வரும் காட்டாற்று வெள்ளமாய் தோன்றிய வாழ்க்கைக்கு காந்தியம்–கரையை – வரம்பினை – அமைத்துத் தந்தது. அவரது வாழ்க்கைத் தத்துவக் கங்கையாகிய போது பாரத புண்ணிய பூமியை வளப்படுத்த ஓடியது; ஓடிக் கொண்டே இருந்தது.

### தவ வாழ்க்கை

இருபதாம் நூற்றாண்டில் தவ வாழ்க்கைக்கு இலக்கியமாய் வாழ்ந்தார் காந்தியடிகள். அண்ணலின் அடிச்சுவட்டில் அதற்கு இலக்கணம் வகுத்துக் கொண்டிருக்கின்றார் விநோபா. அவரின் வழியில் தவ வாழ்க்கை வாழ்ந்து சிறந்தார் ஜெ. பி.

எது தவ வாழ்க்கை? யோகமும் யாகமும் ஞானமும் நிறைந்தது தானே தவ வாழ்க்கை! இதற்கு மகாகவி பாரதியார்,

''ஊருக்குழைத்திடல் யோகம்; நலம்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும் போதும் உளம்
பொங்கல் இல்லாத அமைதி
மெய்ஞ் ஞானம்''

என்று விளக்கம் தருகின்றார்.



ஜெயப்பிரகாஷ்நாராயண்

ஜெ. பி. என்றுமே தனக்காக வாழவில்லை. தாய்த் திருநாட்டின் விடுதலைக்கும் மேம்பாட்டிற்கும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டார். அவர் ஒரு ஜீவன்தானி. தனது வாழ்க்கையையே நாட்டிற்காக வழங்கிய வள்ளல்.

ஊருக்குழைத்திடலை வாணிபமாக்கிவிட்ட காலத்தில் வாழ்கின்றோம். இது விளம்பர யுகம். சில செய்து பல வாகப் பறை சாற்றி பதவியில் அமர்கின்றவர்களையே நாளும் பார்க்கின்றோம். இதற்கு மாறு பட்டவர் ஜே. பி. பதவிகளை அவர் தேடிப்போனதில்லை. தேடிவந்த பதவிகளை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

தரித்திர நாராயணர்களுக்காக உழைக்க ஜெயப்பிரகாஷ் நாராயண் கட்சித் தலைமையைத் துறந்து வந்தார். விநோபா பாவேயின் பூமிதான, கிராம தான இயக்கத்தின் தொண்டராக ஊர் ஊராகச் சென்றார். அவரது பணிகள் ஆரவாரமின்றி நடைபெற்றன. ஊருக்கு உழைத்திடலை கர்ம யோகமாக கொண்டதால் நாட்டுத் தொண்டில் தன்னைக் கரைத்துக்கொள்ள அவர் தயங்கவில்லை.

மக்களின் நலம் ஓங்கிடுமாறு அவர் செய்த யாகம் தியாகமாகச் சுடர் விட்டது. அவர் அமெரிக்கா சென்று படித்தவர். அக்காலத்தில் வெளிநாட்டில் படித்தவர்கள் விரும்பினால் கோடி கோடியாகப் பணத்தைக் குவிக்கலாம். ஆனால் அவரே மக்களின் நலனுக்காகத் தனது நலத்தை இழக்கத் தீர்மானித்தார். குழந்தைக்காக வாழும் தாயாக நாட்டு மக்களுக்காக தனது நலத்தை இழந்து இறுதி வரை வாழ்ந்தார்.

மக்கள் தலைவர் ஜே. பி. தனது வாழ்க்கையையே தொடர் போராக மாற்றிக்கொண்டார். முதலில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போர். நாடு

(2 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீயம்

காந்தி ஆண்டு 110

1979 நவம்பர் - டிசெம்பர்


## மக்கள் நாயகர் ஜே. பி.

மகாத்மாகாந்தி வழியில், சமுதாய அமைப்பை நாடி பின்பற்றும் வாய்ப்பெல்லாம் ஜே. பி. யின் மறைவுடன் தடைப்பட்டுவிட்டதென்றே கூறவேண்டும். காந்தியடிகளுக்கு அடுத்தபடி மக்கள் தங்கள் மனதை கவர்ந்த தார்மீகப் பேரொளியாக ஜே. பி. அவர்களையே மதித்தனர். இந்த நூற்றாண்டு தந்த முப்பெரும் இந்திய மாமனிதரில் ஜே. பி. யும் ஒருவராவர்.

அவர் அரசியல் அதிகாரத்தை ஒரு தொற்று நோய்போல் தீண்டாதிருந்து வந்தார். ஆனால் உண்மையில் அவர் அரசியல் அதிகாரத்தைப் புறக்கணிக்க அடிப்படைக் காரணமாக இருந்தது யாதென்றால் ''மனித உள்ளத்தின் சுதந்திர வேட்கையையும் மனிதாபிமானத்தையும் நிலை நாட்ட அரசியல் அதிகாரம் மட்டும் இருந்து பயனில்லை'' என்று உறுதியாக நம்பியிருந்தமையாலேயே அவர் அரசியல் அதிகாரத்தைத் தொட மறுத்தார். அவர் இந்திய விடுதலையை மட்டும் தனது லட்சியமாகக் கொள்ளாது, ஏகாதிபத்தியம் எங்கு ஆட்சி செய்யினும் அதை எதிர்ப்பதற்கும் எதேச்சாதிகாரம் எங்கு செயல்பட்டாலும் அங்கெல்லாம் அதை எதிர்க்கவும் சித்தமாக இருந்தார்.

ஜனநாயக மரபுகளிலும் பொது வாழ்க்கை மதிப்பீடுகளிலும் செங்குத்தான தாழ்வுற்றதாகத் தென்பட்டன. இவ்வனைத்திற்கும் ஒரு மாற்றம் காண வேண்டுமானால் மக்களின் சிந்தனையிலும் செயலிலும் முற்றிலும் மாறுபட்ட மதிப்பீடுகள் தோன்றும் வண்ணம் ஒரு முழுப் புரட்சியே ஏற்பட்டாலன்றி சாத்தியமாகாதென்று அவர் கருதினார்.

முழுப்புரட்சிக் கருத்துக்கு பூரணமான இலக்கணம் அளிக்கப்படவில்லை. ஆனால் இந்தக் கருத்துக்களிலிருந்துதான் குஜரகத்தில் ''நவ நிர்மாண இயக்கமும் ''பீகாரில் ''மாணவர் புரட்சியும்'' தோன்றின. நவநிர்மாண இயக்கம் குஜராத்தில் ஆட்சியிலிருந்து ஊழல் நிறைந்த அரசைக் கவிழ்த்துவிட்டது. பீஹாரிலும் மாநில அரசை இதேபோன்று வீழ்ச்சியுறச் செய்யத் தக்கதொரு பேரியக்கம் தோன்றியது. ஜே. பி. யின் முழுப்புரட்சிக் கொள்கை இந்தியாவிலுள்ள ஏனைய பல மாநிலங்களுக்கும் பரவக்கூடிய சூழ்நிலைகளும் தென்படலாயின.

## தனக்கென வாழா..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை பெற்ற பிறகு நாட்டு வறுமையை கிராமங்களின் சுரண்டலை எதிர்த்துப் போர். பின்னர் நாட்டில் மக்களாட்சி முடங்க சர்வாதிகாரம் தலை தூக்கியபொழுது அதற்கு எதிராகப் போர். எந்தப் போரில் ஈடுபட்டாலும் அவர் அமைதி இழந்ததில்லை; மனம் தளர்ந்ததில்லை. அவரிடமிருந்த மெய்ஞ் ஞானம் ஆழமானது.

### சாதனை வாழ்க்கை

ஜெ. பி. யின் வாழ்க்கையில் எத்தனையோ சோதனைகள்! அவற்றால் விளைந்த வேதனைகள் ஏராளம். ஆனால் இறுதியில் எல்லாம் சாதனைகளாக மாறின.

11-10-1902 ஆம் ஆண்டில் பிறந்தார். ஓரளவு வளமான குடும்பம். 17-ஆம் வயதில் காந்தியக் கருத்தில் தோய்ந்த குடும்பத்தைச் சேர்ந்த பிரபாவதி தேவியைத் திருமணம் செய்து வைத்தார்கள். படித்துக்கொண்டிருந்த ஜே. பி. காந்தியடிகள் ஆங்கிலேயக் கல்வியைப் புறக்கணித்துவிட்டு நாட்டு விடுதலை இயக்கத்தில் மாணவர்கள் ஈடுபடவேண்டுமென அழைத்தபோது படிப்பைத் துறந்தார்.

20 ஆம் வயதில் அமெரிக்கா சென்றார். ஏழாண்டுகள் அங்கு கல்வி கற்றார். படித்துப் பட்டம் பெறுவதற்கு அவர் அங்கு செய்யாத தொழில் இல்லை. அவர் அமெரிக்காவில் இருந்த காலத்தில் அவரது மனைவி காந்தியடிகளின் ஆசிரமத்தில் இருந்தார். மார்க்சிய வாதியாக இந்தியா திரும்பிய அவர், மனைவியின் மூலம் காந்தியடிகளோடு தொடர்பு கொண்டார். நேருஜியிடமும் நெருங்கி வந்த அவர் நாட்டின் விடுதலை வேள்வித் தீயில் குதித்தார்.

30 ஆம் வயதில் முதன் முறை சிறைப்பட்டார். அதற்குப் பிறகு அவர் பலமுறை சிறை சென்றார். அவர் தனது 72 ஆம் வயதிலும் நாட்டின் நலனுக்காகச் சிறைப் பட்டார். சிறைச் சாலைக்குள் அவர் பட்ட துன்பங்கள் அவரைப் புடம் போட்டன.

காங்கிரஸ் கட்சியில் இருந்த காலத்தில் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபாடு காட்டினார். முதலில் காங்கிரஸ், சோசலிஸ்ட் கட்சி, பின் தனியாக சோசலிஸ்ட் கட்சி, அதிலிருந்து பிரிந்து பிரஜா சோசலிஸ்ட் கட்சி என்று அரசியல் கட்சிகளை அமைத்து தனது இலட்சியத்தை அடைய முயன்றார். ஒரு நிலையில் பண்டித ஜவாஹர்லால் நேருவுக்குப் பிறகு இந்தியாவின் தலைமையமைச்சர் எனக் கருதப்பெற்ற அவர் அரசியலில் பெற்ற கசப்பான அனுபவங்கள் அவரது வாழ்க்கையில் பெரு மாற்றத்தை ஏற்படுத்தின.

1957 இல் தமது 55 ஆம் வயதில் அரசியலைத் துறந்து வினோபாபாவேயின் பூமிதான இயக்கத்தில் சேர்ந்தார். அவர் பாவேயின் இயக்கத் தளபதியாகி இயக்கத்திற்கு புத்தாக்கமும் புதுப் பொலிவும் வழங்கினார். 1971இல் சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளையர்கள் சிலர் அவரிடம் சரணடைந்து புதிய வாழ்க்கையைத் தொடங்கியது குறிப்பிடத் தக்கது.

### முழுமைப் புரட்சி

மக்கள் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் கட்சிகளற்ற மக்களாட்சியைக் காண கனவு கண்டார். காந்தியத்தை எல்லாத் துறைகளிலும் நடைமுறைப்படுத்த முழுமைப் புரட்சிக் கருத்தை உருவாக்கிக் கொடுத்தார்.

ஜே. பி. ஒரு சிந்தனைச் சிற்பி. சிறப்பான செயல் வீரர். ஆற்றல் மிக்க எழுத்தாளர்: புரட்சி மிக்க பேச்சாளர். தொண்டர்களுள் தொண்டராகவும், தலைவர்களுள் தலைவராகவும், தன்னிகரற்றுத் திகழ்ந்தார்.

அவர் கருத்துக்கள் முழுக்கச் செயல்படவேண்டும். அவர் கனவுகள் எல்லாம் நனவுகளாக வேண்டும், அதற்காகப் பாடுபடுவதே அவருக்கு நாம் செலுத்தும் இதய அஞ்சலியாகும்.

ஜே. பி. மறையும் தருணத்தில் மனம் வருந்தி, ஏமாற்றங்களால் நிரம்பியதோர் வாழ்வின் இறுதி நிலையில் இருந்தார். இத்தகையதோர் வாய்ப்பு அவருக்கு ஏற்படாது என்று மக்களில் பலர் நம்பினார்கள். அவர் தொட்ட செயல்களிலெல்லாம் அவரைப்போல் உண்மையான அக்கறையையும் உயர்ந்த மனத்தையும் முழுமையான ஈடுபாட்டையும் தெள்ளத்தெளிவாகக் காண முடிந்தது.

வாழ்க ஜே. பி.! அவர் காண ஏங்கிய முழுப் புரட்சி ஓங்கட்டும்.

### அறிவிப்பு

'காந்தீயம்' சம்பந்தமாகத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

நிர்வாகி,
காந்தீயம்
½, 47ஆவது ஒழுங்கை: ஏ
கொழும்பு-6.
தொலைபேசி: 83579

★ சர்வோதய நற் சமுதாயத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

## 1978 திசம்பர் 31ல் உள்ளவாருன ஒற்றிணைக்கப்பட்ட ஐந்தொகை

**பொது நிதி**

| | | |
|---|---|---|
| ஐந்தொகை மீதி | 1,67,904.19 | |
| கூட்டு செலவுக்கு மிஞ்சிய வரவு | 23,502.05 | 1,91,406.24 |

**நிதிகள்**

| | | |
|---|---|---|
| அச்சுக்கூடம் ... ... | 1860.00 | |
| கிணறு முந்திய ஐந்தொகைப்படி | 7200.00 | |
| கட்டிடம் ... ... | 5784.00 | |
| வன்னித்தம்பி ஞாபக நிதி ... | 200.00 | |
| சமகி நிதி ... ... | 25,000.00 | 4,0044.00 |

**நடப்புப் பரிப்புகள்**

| | | |
|---|---|---|
| கடன் வாங்கியோர் 1ஆம் குறிப்பு | 78,213.00 | |
| மாணவர் அளித்த சேவை ... | 1,645.00 | |
| அட்டுறு செலவடை ... | 525.00 | 80,383.00 |
| | | 3,11,833.24 |

| நிலையான இருப்புக்கள் | முந்திய ஐந்தொகைப் படி | தேடியவை | தேய்மானம் | மீதி |
|---|---|---|---|---|
| காணி—வரவு செலவுக் கணக்கில் செலவாக மாற்றப்பட்டது | 29,209.45 | 920.00 | 2,535.00 | 27,594.45 |
| **கட்டிடம்** | | | | |
| விடுதி, நெசவு, ஏனைய | 79,509.00 | 39,816.80 | 1726.75 | 1,17,599.28 |
| மாட்டுக் கொட்டில் | 3.31 | ——— | 66 | 2.15 |
| கிணறு | 50,162.44 | 17,240.00 | 284.13 | 67,118.31 |
| **தளபாடமும் பொருத்திகளும்** | | | | |
| வண்டில் | 591.02 | ——— | 26.57 | 564.45 |
| விவசாயத் துணைக் கருவிகள் | 7,008.80 | 31.50 | ——— | 7,040.30 |
| நெசவுத் தறி | 34.92 | ——— | 3.49 | 31.43 |
| வானொலி | 4.45 | ——— | 1.10 | 3.33 |
| சுவர்க்கடிகாரம் | 10.87 | ——— | 1.08 | 9.79 |
| நீர்ப் பம்பு | 7,718.36 | ——— | 845.84 | 6872.62 |
| நீர் வடிகட்டி | 70.78 | ——— | 3.54 | 67.24 |
| பைசிக்கல் | 258.50 | ——— | 25.84 | 282,66 |
| அலுமாரி | 154.03 | ——— | 7.70 | 146.33 |
| தளபாடம் | 3,628.16 | 1708.75 | 256.77 | 5080.14 |
| பெற்ரேமெக்ஸ் | 133.34 | ——— | 10.33 | 93.01 |
| தையல் மெஷின் | 1594.77 | ——— | 112.35 | 1482.42 |
| உழவு இயந்திரம், பெட்டி கலப்பை | 48,090.00 | ——— | ——— | 48,090.00 |
| அச்சுக்கூடம் | 2481.66 | ——— | 248.16 | 2233.30 |
| மின்சாரப் பொருத்திகள் | 219.84 | ——— | 21.98 | 197.86 |
| விடுதியகச் சாதனம் | 256.25 | 908.35 | ——— | 1164.60 |
| பம்பும் வைப்பும் | ——— | 14,853.68 | ——— | 14,853.68 |
| | 2,31,110.16 | 75,479.08 | 6,111.29 | 300,477.95 |

| | |
|---|---|
| டிரேக்டர் பராமரிப்பு | 13,313 47 |
| வட்டி | 450.00 |
| தபால் தந்திச் செலவு | 816.00 |
| தொலைபேசி | 816.75 |
| பிரயாணம் | 3492.70 |
| அச்சு எழுத்துக் கருவி வகைக்கு | 371.40 |
| கூலி | 6389 55 |
| தேய்மானம் | 3576.29 |
| கணக்காய்வு கட்டணம் | 600.00 |
| நாளுவிதச் செலவு | 1446.35 |
| சூறுவளி நிவாரணம் | 2335.00 |
| திருவிழாச் செலவு | 493.95 |
| கருத்தரங்குச் செலவு | 3089.50 |
| உணவு | 16,922.45 |
| சிகையலங்காரம் செலவு | 513.75 |
| ஏற்றியிறக்கல் | 1,158.00 |
| சம்பளமும் கூலியும் | 5972.00 |
| காந்தீயமும் அச்சடிப்பும் | 688.00 |
| மாணவர் சேமிப்பு | 1519 00 |
| வெளிச்சம் | 1022.95 |
| உரிமம் | 66,00 |
| குத்தகை வாடகை | 64.00 |
| கல்விச் செலவு | 153.46 |
| விகிதங்கள் | 7.50 |
| திருத்த வேலை | 1334.30 |
| விவசாயச் செலவு | 14830.81 |
| வைத்தியச் செலவு | 877.00 |
| வங்கி கட்டணங்கள் | 8-00 |
| உடை | 375.22 |
| உல்லாசப் பயணமும் பொழுது போக்கும் | 172.25 |
| விடுதியக உபகரணம் | 215.20 |
| காந்திச் சேவை | 72.60 |
| கால்நடை செலவு | 747.10 |
| பரப்பளவு கட்டணம் | 63.00 |
| நெற் செய்கை | 20415.25 |
| மிளகாய்ச் செய்கை | 11879.00 |
| பாதுகாப்புச் செலவு | 25.20 |
| உணவுச் செலவு | 3553.34 |
| காடு வெட்ட | 246.00 |
| செலவை மிஞ்சிய வரவு | 23,502.05 |
| | 1,43,383,33 |

**நிர்மாணம் செய நித்தமும் உழைப்போம் ✶**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகில இலங்கை காந்தி சேவா சங்கம்........**

**1978 திசம்பர் 31ல் உள்ளவாறான ஒன்றிணைக்கப்பட்ட ஐந்தொகை**

| | | | | |
|---|---|---|---|---|
| கால் நடை | — | — | — | 130.00 |
| தொழிலாளர்களுக்கு முற்பணம் | | | | 705.00 |
| **பங்குகள்** | | | | |
| கரைச்சி ப. நோ. கூ. ச. சேமிப்பு | — | — | 154.00 | |
| கூட்டுறவு அச்சகம் | | | | |
| கரைச்சி ப. நோ. கூ. ச. சேமிப்பு | — | — | 22.00 | |
| சர்வோதய நிலையம் | — | — | 1626.00 | |
| | | | | 1812.00 |
| **வைப்பு** | | | | |
| மின்சாரம் | — | — | 75,00 | |
| தொலைபேசி | — | — | 225.00 | |
| நானாவித கூனனிகள் | | | | 300.00 |
| முந்திய ஐந்தொகைப்படி | — | — | — | 2003.43 |
| வங்கி இருப்பு 2 ஆம் இலக்கக் குறிப்பு | — | — | — | 5356.37 |
| கையிருப்புக் காசு | | | | 1048.24 |
| | | | | 3,11,833.24 |

## கடன் வாங்கியோர்

**1ஆம் குறிப்பு**

| | |
|---|---|
| இலங்கை பட்டினி விடுதலை இயக்கச் சபை | 48,700.00 |
| எஸ். டேவிட் | 6000.00 |
| எஸ். கே. வேலாயுத பிள்ளை | 500.00 |
| எஸ். கே. தம்பிப் பிள்ளை | 2370.00 |
| காந்தி அச்சகம் | 245,00 |
| கரைச்சி தெற்குப் பு. நோ. கூ. ச. | 3751.50 |
| இலங்கை வங்கி | 3075.00 |
| திருமதி அன்னலட்சுமி | 1000.00 |
| கே. விசுவலிங்கம் | 2000.00 |
| ரி. தாசீயசு | 1881.00 |
| திருமதி ரி. இரத்தினம் | 2000.00 |
| ரி. இராசையா | 5000.00 |
| எஸ். கந்தையா | 700.00 |
| எஸ். இராசரத்தினம் | 500.00 |
| நானாவித ஆட்கள் | 490.50 |
| | 78,213.00 |

## வங்கியிருப்பு

**2ஆம் குறிப்பு**

| | | |
|---|---|---|
| தேசிய சேமிப்பு வங்கி | | 1,757,42 |
| மக்கள் வங்கி சேமிப்பு | | 853.19 |
| இலங்கை வங்கி | 64.92 | |
| | 325.00 | |
| | 515.30 | 905.22 |
| மக்கள் வங்கி | | 1840.54 |
| | | 5356.37 |

| | |
|---|---|
| நானாவித வருமானம் | 557.05 |
| சீமந்து விற்பனை | 1397.50 |
| அன்பளிப்புக் காசு | 2708.15 |
| அரசாங்க நன்கொடை | 7226.25 |
| பாதுகாப்பு ப. நோ. கூ. ச. | 1020.00 |
| வாடகை | 1020,00 |
| விவசாய வருமானம் | 51,673.98 |
| அன்பளிப்பு உணவு | 30.00 |
| சந்தாப் பணம் | 435.00 |
| பட்டினி விடுதலைச் சங்கத்தின் நன்கொடை | 45,000.00 |
| தொலைபேசி வருமானம் | 84.95 |
| ட்ருய்க்டரிலிருந்து ,, | 19,870.00 |
| மக்கள் வங்கியிலிருந்து வட்டி | 99.56 |
| தேசிய சேமிப்பு வட்டி | 436.52 |
| சருவோதய பாத்திரம் அரிசி | 179.00 |
| சருவோதய காசு | 755.75 |
| காந்தீயம் விற்பனை | 334.75 |
| கால்நாடை வருமானம் | 9804.00 |
| பப்படம் விற்பனை | 750.27 |
| ஏடுகளிலுள்ள வேறுபாடு | .10 |
| | 1,43,383.33 |

## உண்ணாவிரதம் பற்றிய விளக்கம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் புதிய நிர்வாக சபை 1978–12–30 ஆம் திகதி தெரிவு செய்யப் பட்டது. அதுவரை பொருளாளராக இருந்த திரு. சி. க. வேலாயுதபிள்ளை பல காரணங்களைச் சொல்லி கணக்குப் புத்தகங்களைப் புதிய பொருளாளரிடம் கையளிப்பதைப் பின் போட்டுக் கொண்டு வந்தார். இப்புத்தகங்கள் இன்னும் முறைப்படி கையளிக்கப்பட வில்லை. இச்சூழ்நிலையில் சங்கக் கணக்குகள் திருப்தியாக இல்லையெனக் கூறிக் கொண்டு திரு. சி. க. வேலாயுதபிள்ளை 'உண்ணாவிரதம்' இருக்கப்போவதாகக் கூறினார்.

இவரது 'உண்ணாவிரதம்' மக்களிடையே குழப்பமான நிலையை ஏற்படுத் தியமையால் மக்கள் உண்மை நிலையை அறிய ஆவல் கொண்டு சங்கத்துடன் தொடர்பு கொண்டனர்.

11–11–79இல் நடைபெற்ற நிர்வாகசபை 'உண்ணாவிரதம்' பற்றி ஆராய்ந்து பின்வரும் தீர்மானத்தை சங்க அங்கத்தவர், ஆதரவாளர், அநுதாபிகள் ஆகியோருக்கு அறிவிப்பதற்காக ஏகமனதாக நிறைவேற்றியது.

11–11–79இல் உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் கூடிய அகில இலங்கைக் காந்தி சேவா சங்க நிருவாக சபைக் கூட்டத்தில் திரு. சி. க. வேலாயுதபிள்ளையால் எழுப்பப்பட்ட சந்தேகங்கள், குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக ஆராயப் பட்டது. சகல விடயங்களையும் ஆராய்ந்து சந்தேகங்கள் நிவர்த்தி செய்யப்பட்டதுடன் நிதி சம்பந்தமான சந்தேகங்களுக்கும் விளக்கம் கொடுக்கப் பட்ட பின் உண்ணாவிரதம் கைவிடப் பட்டது.

## சிவஞானம் ஆணைக்குழு

காந்தி நிலையத்தைப் புனரமைப்புச் செய்வதற்கான தகுந்த திட்டமொன்றினைத் தயாரிப்பதற்காக சுளிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. என். சிவஞானம் அவர்களின் தலைமையில் செயல்பட்டு வரும் ஆணைக்குழு தமது பணியை நிறைவேற்றி விரைவில் திட்டத்தைச் சமர்ப்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பத்திரிகை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக விவேகானந்தர் மேடு, கொழும்பு - 13 சங்கர் சன்ஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

இலங்கையில் புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org